# சேரனின் 'காடாற்று' பா.அகிலனின் 'சரமகவிகள்' ஆகியவற்றை முன்வைத்த ஓர் ஆய்வு

த. அஜந்தகுமார்

tajanthakumar@gmail.com

**சுருக்கம்:** ஈழத்து நவீன தமிழ்க்கவிதையின் புதிய அனுபவங்களுக்கும் படிமங்களுக்கும் போர்க்காலம் பெரும் பங்களிப்பை வழங்கியிருந்தது. போர் முடிவுக்கு வந்துள்ளது என்ற சூழலில் போருக்குப் பின்னான கவிதைகளின் பாடுபொருள் போக்கை அறிவது என்பது முக்கியமானது. 1980களில் போர் முனைப்புப் பெறத் தொடங்கிய காலத்தில் தனது கவிதைகளால் இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் பெரிதும் கவனத்தை ஈர்த்த சேரனும் 1990களில் பதுங்குகுழி நாட்களின் அனுபவங்களைப் பேசத் தொடங்கிய பா.அகிலனும் போரின் பின்னாக எழுதிய கவிதைகளை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாம். சேரனின் 'காடாற்று' (டிசம்பர் 2011), பா.அகிலனின் சரமகவிகள் (நவம்பர் 2011) ஆகிய கவிதைத்தொகுப்புக்களே இவ்வாய்வின் அடிப்படை மூலங்களாகும். புறநானூற்றுக்காலம் எங்களுக்குப் போரின் அறைகூவலை, போர் வாழ்வில் கலந்த உவகையை, அதன் அழிவை, போரின் பின்னான சமூகக் கட்டமைப்புச் சிதைவை, அறநெறிக்காலம் ஒன்றுக்கான அவாவுகையை வேண்டிநின்றதை நாம் படித்துணர்ந்திருந்தோம். வாழ்வின் வேர்களை, வேதனையை இலக்கியங்கள் வழியேதான் தரிசிக்கமுடியும். கவிதையே இதை ஆழமாக வெளிப்படுத்தக்கூடிய வடிவம் ஆகும். இந்த வகையில் இவ்வாய்வு என்பது போரின் பின்னான தமிழரின் மனதை விசாரித்தறியும் செயற்பாடே. போர் நடைபெற்ற வேளையில் அதை அந்தச் சூழலின் சூட்டோடு அனுபவித்த தன்மையையும், வெளியிலிருந்து அதனாற்பட்ட பாடுகளையும், ஓர் இனம் போரின் பிறகான தன்வாழ்வை எவ்வாறு தகவமைக்கிறது, தகவமைக்கவேண்டும் என்ற ஆர்வத்தையும் நாம் கண்டறிவது முக்கியமானது. இலக்கியம் சமூக ஆவணம் என்ற வகையில் போரின் பின்னான கவிதையை ஆராய்வது என்பது சமூக, உளவியல், பண்பாட்டு வழியான தமிழரின் கூட்டுமனத்தில் பயணிப்பதன் முயல்வே ஆகும். போருக்குள் வாழ்ந்தும் போரை நேரில் அனுபவமாய் உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் உணர்ந்தும் வந்த கவிதைகளின் சுருதிகள் வெவ்வேறானவை. இலங்கையின் போருக்கு முந்திய வாழ்வு பற்றிய நினைவுகொள்ளல், போரின் நேரடி அனுபவங்கள், போரின் பின்னான துயர்வாழ்வின் கவிதல் இக்கவிதைகளில் தொடர்வதைக் காணலாம். எனவே இதனை ஓர் ஆவணமாகக் கொள்ளவேண்டும். போர் கருக்கட்டத் தொடங்கியபோது பாடத்தொடங்கிய சேரன் போர் முடிந்தபிறகு எவ்வாறு இந்தக் 'காடாற்றை' கவிதையில் செய்து இருக்கிறார் என்று பார்ப்பதும் 'பதுங்குகுழி' நாட்களில் இருந்து தன் கவிதைகளைத் தொடங்கிய அகிலன், போர் முடிவில் காயம், வலி, இழப்பு, தேகவியோகம் என்பன குறித்து 'சரமகவிகளை' எவ்வாறு பாடியிருக்கிறார் என்பதை அறிந்து கொள்வதும் நோக்கமாகிறன. 'காடாற்றை' கனடாவில் இருந்து செய்தும் 'சரமகவிகளை' யாழ்ப்பாணத்தில் இருந்து பாடியும் இருக்கும் இக்கவிக்கிரியைகள் போரின் பின்னான கவிதைப் போக்கில் எவ்வகையான முக்கியத்துவத்தைப் பெறுகின்றன என்பதையும் இவ்வாய்வு தனது நோக்கமாக வரித்துள்ளது.

இந்த ஆய்வு விவரண ஆய்வு முறையியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டாலும் இருவரின் கவித்தொகைகளையும் உள்ளடக்கப்பகுப்பாய்வுக்கு உட்படுத்துகின்றது. சில இடங்களில் ஒப்பாய்வும் மேற்கொள்ளப்படுகிறது. போர் தொடங்கிய, போர் நடந்த காலப்பகுதியில் இவர்களின் கவிதைகள் இயங்கிய விதம் நோக்கப்படுகிறது. போரின் முடிவுக்கு முன்பும் பின்பும் கவிதை இயங்குதளத்தில் அவை சந்தித்திருக்கும் மாற்றங்கள் பரிசீலிக்கப்படுகின்றன .இருவரின் கவிதைகளும் பேசும் பாடுபொருள் நுணுகி நோக்கப்படுகிறது. தலைப்பு முதல் உள்ளடக்கம் வரை இருவரின் கவிநூல்களும் ஒப்பிடப்படுகிறது. போரின் பின்னான கவிதைகளில் இக்கவிதைகளின் முக்கியத்துவம் மதிப்பிடப்படுகிறது போர்க்காலக் கவிதைகளில் இருந்ததைப்போன்ற ஆனால் மாபெரும் மனிதவியற் சோகத்துடன் கூடிய உணர்வை உலுப்பக்கூடிய கவிதைகளாக இவை விளங்குகின்றன. போர் முடிவு பற்றிய அதன் அவலம் பற்றிய கண்ணோட்டம் இரு கவித்தொகைகளிலும் ஒத்துப்போகிறது. கொள்கைகளுக்கு அப்பால் சோகம்,ஆற்றாமை, தவிர்க்க முடியாத இடைவெளி, கையறு நிலை இக்கவிதைகளின் பொதுத்தன்மையாய் தோன்றுகிறது. இரத்தம் சிதறியொட்டாத ஒரு கவிதையைக் காண்பது என்பது அரிது என்பதை போரின் பின்னான இரு கவிதைநூல்களும் நிரூபிக்கின்றன. புறநானூற்றுக் கவிதைகளின் உவகைக்கலுழ்ச்சிக்குள் இருந்திருக்கக்கூடிய அதே அவலத்தடங்களை போரின் பின்னான இக்கவிதைகளும் கிட்டத்தட்ட அம்மொழியின் வீரியத்துடன் சுமக்கின்றன. கவிதை வெளிப்பாட்டின் உத்தியிலும் புதிய மாற்றங்களை இத்தொகுதிகள் காட்டுகின்றன.